மொத்த நிலையான வட்டி ரூபா 4,397 மில். பிணை முறிகள் (அரை வருடம்) ரூபா 7,209 (50% திறைசேரியினால் உத்தரவாதமளிக்கப்பட்டது) மற்றும் பிணைகளின் தற்போதைய பெறுமதி நீண்டகாலப் பொறுப்புக்காக 8.5% இல் கழிவு வழங்கப்பட்ட நீண்டகால பொறுப்புக்களாக கணக்குகளில் சேர்க்கப்பட்டது. 2008 இல் திறைசேரியினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வட்டி 50% ஆக இருந்த போதிலும், அமைச்சரவை தீர்மானத்தின் படி, 2004 மே 1 ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் முழு வட்டியினையும் செலுத்துவதற்குப் பொறுப்பேற்றது. இதனால் அனைத்து திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் மறுசீரமைப்பு ஒதுக்கீட்டுக்கு மாற்றப்பட்டது.

| குறிப்பு13 : கடன்கொடுத்தோரும் சேர்ந்தவைகளும் | 2010 ரூபா | 2009 ரூபா |
|---|---|---|
| <u>கூமொதா</u> | | |
| வியாபார கடன்கொடுதோர்கள் | 97,152,128 | 48,479,685 |
| இறக்குமதி கொள்வனவுகளும் கட்டணங்களும் | 221,791,461 | 278,639,036 |
| திறைசேரி - நெல் முற்பணம் | 254,149,693 | 254,149,693 |
| ஊழியர்களுக்கான சம்பளங்களும் சென்மதிகளும் | 3,795,500 | 40,810,159 |
| பதவியினர் பிணை வைப்பும் வட்டியும் | 2,908,539 | 2,957,156 |
| மக்கள் வங்கியின் ரி.ஆர் கடன்கள் | 207,050,943 | 207,050,943 |
| ஏனைய கடன் கொடுத்தோர்கள் | 249,245,736 | 511,274,126 |
| | **1,036,094,000** | **1,343,360,796** |
| **குறுகிய காலக் கடன்** | | |
| கூட்டுறவு ஆணையாளர் | 50,000,000 | - |
| <u>மா தொழிற்பாடு</u> | | |
| ஏனைய கடன் கொடுத்தோர்கள் | | 54,646,460 |
| சில்லறை லிமிட்டட்டிலிருந்து மாற்றப்பட்டது | - | 87,630,016 |
| | **1,086,094,000** | **1,485,637,273** |

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

| குறிப்பு14 : இழைப்பாறல் பயன் கடப்பாடுகள் | கூமொதா 2010 ரூபா | கூமொதா 2009 ரூபா |
|---|---|---|
| 01.01.09 இலுள்ளவாறான மீதி | 22,314,962 | 20,372,180 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு | (902,870) | (2,408,305) |
| குறித்த ஆண்டுக்கான அறவீடுகள் | 4,781,414 | 4,351,087 |
| 31.12.09 இலுள்ளவாறான மீதி | **26,193,506** | **22,314,962** |
| **குறிப்பு15 : வங்கி கடன்கள்** | | |
| இலங்கை வங்கி கடன் சீரமைப்பின் பின்னரான மீதி | 100,000,000 | 100,000,000 |
| மக்கள் வங்கி | 66,231,254 | 61,003,057 |
| ஹட்டன் நஷனல் வங்கி | 43,000,000 | 43,000,000 |
| | **209,231,254** | **204,003,057** |
| **குறிப்பு 16 : வங்கி மேலதிகப் பற்று** | | |
| கூமொதா | | |
| மேலதிக கடன்கள் | | - |
| வங்கி மாற்றல்கள் | | 9,596,445 |
| மக்கள் வங்கி - வெளிநாட்டு கிளை | | - |
| சம்பத் வங்கி | 1,243,775 | 1,243,775 |
| மக்கள் வங்கி- புதிய கணக்கு 2007 | | 10,258,045 |
| டிப்போ வங்கி | 242,144 | 242,144 |
| பொது பெறுகை கட்டுப்பாட்டுக் கணக்கு | | 89,275 |
| சிற்றி வங்கி | | 314,492 |
| கொமர்ஷல் வங்கி | | 1,510,867 |
| | **1,485,919** | **23,255,044** |

குறிப்பு 17

**துணைக் கம்பனிகளை ஒருங்கிணைமைக்கான காரணங்கள்**
**சதொச சில்லறை லிமிட்டட்**

கூ.மொ.தா ஆனது 2003 இல் தனியார் துறைக்கு சதொச சில்லறை லிமிட்டடின் 40% மான பங்குகளை விற்பனை செய்துள்ளதுடன் 2006 இல் நீதிமன்ற கட்டளையின் மூலம் கலைப்புச் செய்யப்பட்ட சதொச சில்லறை லிமிட்டடின் கணக்குகளின் கிடைப்பனவின்மை காரணமாக எம்மால் கடந்த காலங்களில் திரண்ட கணக்குகளை தயாரிக்க முடியவில்லை.

குறிப்பு 18

**எதிர்பாராத பொறுப்புக்கள்**

(1) நீடித்த பங்குலாப வரி – உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 1992/1993 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்ட மதிப்பீடானது பின்வருமாறு.

| | வரி (ரூபா) | தண்டப்பணம் (ரூபா |
|---|---|---|
| 1992/1993 | 65,249,578 | 82,624,789 |

மீளாய்வு சபையானது Y/A 92/93 இற்கான ஆணையாளரின் மதிப்பீட்டினை உறுதிப்படுத்தியுள்ளதுடன் கூ.மொ.தா ஆனது இதற்கெதிராக மேன் முறையீடு செய்துள்ளதுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையிலுள்ளது. உள்நாட்டு இறைவரித்திணைக்களமானது தனது வழக்கில் தண்டப்பணமல்லாமல் நீடித்த பங்குலாபத்தினை மட்டுமே கோரியிருந்தது.

(2) 55 வயதில் இழைப்பாறிய ஊழியர்கள் உச்ச நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்காக வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன் ரூபா 3.8 மில்லியன் எதிர்பாராத பொறுப்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(3) கடந்தகால ஊழியர்களினால் சுமார் 106 வழக்குகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இந்த வழக்குகளினால் ஏற்பட்ட நிதி ரீதியான விளைவுகளை எம்மால் மதிப்பிடு செய்ய முடியவில்லை.

குறிப்பு 19

**வரி விதிப்பு**

**வருமான வரி**

வரிவிதிப்பானது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைவாக, கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வரிப் பொறுப்பானது Y/A 2009/2010 மற்றும் 2010/2011 ஆம் ஆண்டுகளில் வரி இழப்பாக முன்கொண்டு வரப்பட்ட முறையே ரூபா 9.7 (பில்லியன்) மற்றும் ரூபா 10.3 (பில்லியன்) ஆக காணப்படவில்லை.

**நீடித்த வரி விதிப்பு**

தேய்மானக் கொடுப்பனவானது தேறிய புத்தக பெறுமதியின் மிகை மீதான நீடித்த வருமானத்திற்கு தேவைப்படுவதில்லை. தேய்மான படிகள் சொத்துக்களின் கால வித்தியாசத்தின் அடிப்படையில் சொத்துக்களின் புத்தக பெறுமதி பதிவளிப்பு பெறுமதியில் அதன் வரியினை கோரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஒதுக்கத்திற்கு இத்தகைய கால வேறுபாடுகள் பொருந்தாது.

குறிப்பு 20

**சதொச சில்லறை லிமிட்டட்**

கூமொதா இன் துணைக்கம்பனியாக இருந்த சதொச சில்லறை லிமிட்டட்டானது கொழும்புமாவட்ட நீதிமன்றத்தினால் 2006, ஒக்டோபர் 23 ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதுடன் கலைப்பு நடவடிக்கையானது இதுவரையில் நிறைவு செய்யப்படவில்லை.

குறிப்பு 21

பணிப்பாளர்கள் கூ.மொ.தா இல் அல்லது அதன் துணைக்கம்பனிகளில் பங்குகள் எதனையும் வைத்திருக்க முடியாது.

குறிப்பு 22

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்கள்**

பணிப்பாளர்கள் கூ.மொ.தா உடன் ஏதேனும் ஒப்பந்தத்தினை வைத்திருக்க முடியாது.

குறிப்பு 23

**தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்**

கூ.மொ.தா இன் தலைவரே அரச வர்த்தக (கூட்டுறவு மொத்த விற்பனை) கம்பனி மற்றும் பாதுகாப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவைகள் (தனியார்) லிமிட்டட் ஆகியவற்றின் தலைவராகவும் உள்ளார். மீளாய்வின் கீழான குறித்த ஆண்டு காலப்பகுதியில், அரச வர்த்தக (கூட்டுறவு மொத்த விற்பனை ) கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகள் ரூபா.122 மில்லியன் பெறுமதிக்கு கூ.மொ.தா இற்கு மாற்றப்பட்டுள்ளது.

குறிப்பு 24

**ஐந்தொகை திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

ஐந்தொகை திகதிக்குப் பின்னர் ஐந்தொகையினை பாதிக்கக்கூடிய நிகழ்வுகள் எதுவும் இடம்பெறவில்லை.

குறிப்பு 25

**காசும் காசுக்கு சமமானவையும்**

காசும் காசுக்கு சமமானவையும் கையிலுள்ள காசு வங்கியிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள கேள்வி வைப்புக்களையும் வங்கிக் கடன்களையும் உள்ளடக்குகின்றது.

குறிப்பு 26

**நீண்ட காலக் கடன்கள்**

2003, டிசம்பரில் இலங்கை அரசாங்கமானது கடன்களை தீர்க்கும் வழியாக உரிய வங்கிகளுக்கு ரூபா.4397 மில்லியன் ரூபா பெறுமதிக்கு பிணை முறிகளை வழங்கியுள்ளது. கூ.மொ.தா ஆனது 2005 இல் ரூபா 1.8 மில்லியன் பெறுமதியுடைய சொத்துக்களை விற்பனை செய்து திறைசேரிக்கு அனுப்பி வைப்பதற்காக PERC இடம் கையளிக்குமாறு கோரப்பட்டிருந்தது. அவற்றின் தற்போதைய பெறுமதி ரூபா 4,397 ஆகும். எவ்வாறாயினும், அதனை திறைசேரி மதிப்பீடு செய்துள்ளதனால் அமுல்படுத்தப்படவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: எஸ்சீ/ஈ/சீடப்லிவ்ஈ /எப்ஏ/ ஏஎம்என்டி/ஏ/2010

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2012 யூலை 20

தலைவர்,

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்

**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1969 இன் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2011 திசெம்பர் 21 ஆம் திகதி தலைவருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்திச் செல்லல், பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளைத் தெரிவுசெய்தல் மற்றும் பிரயோகித்தல், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வு பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, முகாமையால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களினையும், குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உச்ச அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதியளவு தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன். அதன் பிரகாரம், நான் என்னுடைய கணக்காய்வின் மூலம் எனது அபிப்பிராயத்திற்காக போதியளவு அடிப்படையொன்று வழங்கப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் காணப்படுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் ஓர் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

(அ) பொது முயற்சிகள் தொடர்பாக குழுவினால் 2011 ஒக்தோபர் 13 ஆம் திகதி 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை மீண்டும் தயாரித்து கணக்காய்விற்ச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ச.தோ.ச தலைவருக்கு கட்டளையிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மீண்டும் தயாரிக்கப்பட்டு 2012 சனவரி 05 ஆம் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் விற்பனைக் கிரயம் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், போதியளவான பதிவுகளின் மூலம் விற்பனைக் கிரயம் கணிக்கப்பட்ட முறை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்(இ.க.நி)

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) இ.க.நி 03

தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இலுள்ள வழிகாட்டல் பின்பற்றப்பட வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும், சதோசவின் வருமானக்கூற்றும் ஐந்தொகையும் அவ் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை.

- விற்பனைக் கிரயம் வருமானக் கூற்றின் முகப்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்காமை.
- வருமானக் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை.
- ஏனைய வருமானங்கள் செயற்பாட்டு விளைவுகளுக்கு பின்னர் செம்மையாக்கப்பட்டிருத்தல்.

(ஆ) இ.க.நி 05

இருப்புக்களை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்தல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்தமைக்கான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இ.க.நி 09 மற்றும் 18

(i) காசுப் பாய்ச்சல் கூற்றில் நிலையான சொத்துக்களின் விற்பனை இலாபம் ரூபா 192,889 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், சமர்ப்பிக் கப்பட்ட பதிலின் மூலம் முழுமையற்றதும் கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு முரணானதுமான புள்ளிவிபரங்கள் இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ii) தொழில்சார் தகைமை பெற்ற மதிப்பீட்டாளரால் மதிப்பீட்டின் மூலம் நிர்ணயிக்கப்பட்டு சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டியிருந்ததுடன், மீள்மதிப்பீட்டு அடிப்படை, பதிலீட்டுக் கிரயம் (Replacement Cost) தீர்மானிக்கும் சுட்டெண்களின் தன்மை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வேற்பாடுகளுக்கு முரணாக தாபனத்தின் போக்குவரத்து பிரிவின் முகாமையாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) இ.க.நி 36

(i) சட்டச் செலவினமாக ரூபா 1,043,768 செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட போதும் சட்டச் செலவினமாக ரூபா 1,393,797 காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் முகாமைத்துவத்தினால் 2010 ஆம் ஆண்டின்

சட்டச் செலவினப் பட்டோலையில் ரூபா 741,840 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 651,957 செலவினம் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யாமையால் தாபனத்திற்கு எதிராக 05 வழக்குகள் தொடரப்பட்டு அதன் மூலம் ரூபா 3,895,235 தொகை இழப்பீடாகக் கோரப்பட்டிருந்தது. இந் நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 3.8 மில்லியன் பெறுமதியானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிலில் ரூபா 2.7 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்தது.
இவ்வித்தியாசத்திற்கான காரணமும் மதிப்பீட்டு அடிப்படையும் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்குகளில் கூடுதலாகவும் குறைத்தும் காண்பித்தல்

ரூபா 97,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் டேலர் ஒன்றும் 2010 பெப்ரவரி 01 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ரூபா 97,000 கிரயப் பெறுமதி மற்றும் ரூபா 12,000 தொகையான பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடுகள் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முடிவுக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொழிப்பாக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 2009 திசெம்பர் 31 இல் ரூபா 51,744,688 ஆன தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி 2010 சனவரி 01 இல் ரூபா 51,937,589 ஆக காண்பிக்கப்பட்டிந்தது. அவ்வாறே 2009 திசெம்பர் 31 இல் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அதற்குரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் விரிவாக பட்டோலை மற்றும் பொழிப்பாக்கிய அட்டவணைகளுக்கிடையே காணப்பட்ட வித்தியாசம் முறையே ரூபா 8,211,421 மற்றும் ரூபா 8,116,617 ரூபா தொகையான வேறுபாட்டினைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக உரிய சீராக்கங்கள் 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதாக முகாமைத்துவத்தினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட விதத்தை கணக்காய்விற்கு உறுதிப்படுத்துவதற்கு முகாமை தவறியிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2009 ஆம் ஆண்டின் 07 கணக்கு விடயங்களின் ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளுக்கிடையே ரூபா 2,268,498,943 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி மற்றும் பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்டிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதிகளை ஒப்பிடும் போது 43 கணக்கு மீதிகளில் ரூபா 2,838,392,254 கூட்டுத்தொகையானது வேறுபாடுகள் இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், பின்னர் அவ்வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காரணங்களை ஏற்றுக்கொள்வதற்கு போதியளவு உறுதிப்படுத்தல்கள், இணக்கக் கூற்றுக்கள், பட்டோலைகள் போன்றன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தாபனத்தினால் 2010 ஆண்டிற்குரிய பிரதான பேரேட்டின் வன் பிரதி (Hard Copy) 2012 பெப்ரவரி 02 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பெறுமதி, பேரேட்டில் இறுதி மீதி என்பவற்றை கொடுக்கல்வாங்கல்களுடன் இணக்கம் செய்யப்பட்டு உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(உ) பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் காண்பிக்கப்பட்டிருந்த மொத்த செலவுகளின் ரூபா 147,358 தொகையான வித்தியாசமும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் ஐந்தொகையிலும் காண்பிக்கப்பட்டிருந்த 09 மீதிகளுக்குரிய ரூபா 742,961,051 தொகையான வித்தியாசமும் அவதானிக்கப்பட்டதுடன், அதற்குரிய உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. திருத்திய பரீட்சை மீதியைத் தயாரிக்கும் போது 15 கணக்கு மீதிகளுக்குரிய ரூபா 3,117,920 கூட்டுத்தொகையான வேறுபாடு இருந்த போதிலும், அதற்குரிய உறுதிப்படுத்தல்கள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திருத்திய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நிதி விளைவுகள் மற்றும் திருத்திய பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருந்த நிதி விளைவுகளுக்கிடையே பெறுமதி ஒரு மில்லியனால் வேறுபடுவதற்குரிய காரணமும் அதற்குரிய உறுதிப்படுத்தல்கள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மேற்படி (அ),(ஆ), (இ),(ஈ), மற்றும் (உ) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பிப்பதற்குரிய கணக்கியல்சார் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் போன்ற நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவ பொறுப்புக்கள நிறைவேற்றப்பட்டி ருக்கவில்லை.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 வரையில் 198 நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 124,551,893 ஆக இருந்ததுடன், இத்தொகையை அறவிடுவதற்கு

போதியளவு நடைமுறை 2011 ஏப்ரல் மாதம் வரையில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்போது மாதாந்தம் ரூபா 75,000 வாடகை அடிப்படையில் கம்பனியொன்றிடமிருந்து பெற்றுக்கொண்ட கட்டிடம் சதோசவினால் உப குத்தகை உடன்படிக்கையொன்றின் கீழ் மாதாந்தம் ரூபா 195,000 வாடகைக்கு வேறு கம்பனியொன்றிற்கு 2005 மார்ச் 05 ஆம் திகதி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகைக்கு எடுத்த கம்பனிக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 75,000 வீதப்படியான தவணைப் பணம் தொடர்ந்தும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், வாடகைக்கு வழங்கப்பட்ட கம்பனியிடமிருந்து 2010 திசெம்பர் 31 வரை தாபனத்தினால் ரூபா 4,904,250 தொகையான வாடகை வருமானம் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் 2010 ஆம் ஆண்டிற்குரிய தொகையினை அறவிடப்பட்டதாக கணக்காய்விற்காக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய விரிவான உறுதிப்படுத்தல்கள், பட்டோலைகள் என்பன இதுவரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெலிசர களஞ்சிய தொகுதியில் தாபிக்கப்பட்டுள்ள லக் சதோசவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ரூபா 126,156,746 கூட்டுத்தொகையான சொத்துக்களுக்காக எப் பணமும் 2012 யூலை 05 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 காசும் வங்கி மீதியும்

------------------------------------

நடைமுறைக் கணக்கு இலக்கம் 1415160701 (பேரேட்டு இலக்கம் 1545428) இற்குரிய ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள வங்கி மீதி ரூபா 16,298,762 ஆன போதிலும், வங்கிக் கணக்கிணக்கம் மற்றும் காசேட்டின் பிரகாரம் அம் மீதி ரூபா 12,573,250 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,725,511 தொகையான வேறுபாட்டிற்கான காரணம் கணனி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமையில் பிழையொன்று இருந்ததாக முகாமைத்துவத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பிழை ஏற்பட்ட முறை கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.7 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

---

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(5)(பீ)ஆம் பிரிவு | தாபனத்தின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 13(5)(பி) பிரிவின் பிரகாரம் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1966 இன் 38 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவால் திருத்தப்பட்ட 1949 இன் 47 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவு | ச.தோ.ச தனது உத்தியோகபூர்வ முத்திரையின் கீழ் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளும் போது தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினால் பெயர் குறிப்பிடப்பட்ட பணிப்பாளரும் ஒப்பமிட வேண்டிய போதிலும் வ/ப லங்கா ச.தோ.ச கம்பனிக்கு கட்டிடத்தினை வாடகைக்கு வழங்கும் போது 02 உடன்படிக்கைகளில் தலைவர் கையொப்பம் இட்டிருக்கவில்லை 1966 இன் 38 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக முகாமைத்துவத்தால் 2009 யூலை 24 ஆம் திகதிய கடிதத்தின் எனக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்ட தற்கான சான்றுகள் காணப்படவில்லை. இவ்விரண்டு உடன்படிக்கைக்குரிய |

கொடுக்கல்வாங்கல்கள் பணிப்பாளர்களினால் கையெழுத்திடப்பட்டு பின்னர் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதாக தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டி ருந்த போதும் உரிய உறுதிப்படுத்தல் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 யூன் 02 இன் பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின்

(i) 5:1.2 ஆம் பிரிவு

2007 முதல் 2010 வரையான காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் கணக்காய்விற்கு 2009 திசெம்பர் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்படாத முறையற்ற கூட்டிணைந்த திட்டத்தில் 2010 ஆம் ஆண்டிற்காக எதிர்கால தந்திரோபாயத் திட்டமிடல், அவற்றின் நடைமுறைச் சாத்தியம் இலக்கு நோக்கி நியாயமாக தொடர்புபடுத்தல் மற்றும் பணிப்பாளர் சபையினதும் சிரேஷ்ட முகாமையினதும் பொறுப்புக்கள் என்பன தெளிவாகவும் குறிப்பாகவும் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) 5:1.3 ஆம் பிரிவு

தாபனத்தின் பணிப்பாளர் சபை அங்கீகரித்த மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டமொன்றையும் வருடாந்த பாதீடொன்றையும் தயாரித்து ஒவ்வொரு கணக்காண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் 2010 முதல் 2012 வரையான இரண்டு ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டமும் வருடாந்த பாதீடும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 5.2.2, 8.3.2 ஆம் பிரிவுகள் மற்றும் 1999 ஒக்தோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை யின் 1.1.6(v) மற்றும் 1.3 ஆம் பிரிவுகள் மற்றும் நி.பி 1646

(i) 'சீ' தரத்தினாலான அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் உத்தியோகபூர்வ வாகனங்களை பயன்படுத்த உரித்தற்ற நான்கு உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை நியதிகளுக்கு முரணாக மீளாய்வாண்டில் எரிபொருள் படிகளாக ரூபா 480,900 தொகையும் முன்னைய ஆண்டில் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 400,500 தொகையும் வழங்கப்பட்டிருந்தன. கடந்த காலங்களில் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறு எரிபொருள் படிகள் செலுத்தியமையால் அந்நடை முறை பின்பற்றப்பட்டதாக முகாமைத்துவத்தினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் நிறைவேற்று உத்தியோகத்தர்களாகிய மேற்கூறிய மூன்று உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர் நடை முறைகளுக்கேற்ப மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(ii) உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துப் பெறாத உத்தியோ கத்தர்கள் உத்தியோகபூர்வ வாகனமாக தாபனத்தின் வாகனக் குளாமில் இருந்த வாகனங்களை உரிய அங்கீகாரமின்றி ஒதுக்கிக் கொண்டு பயன்படுத்தியமையால் தாபனத்தின் நாளாந்த கடமை களுக்கு இடையூறு விளைவிக்கும் நிலைமையொன்று தோன்றியிருந்த துடன், வாகனங்களின் ஓட்டப் பதிவேடு மற்றும் மாதாந்த ஓட்டப் பதிவேடு என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச்

சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

| | | |
|---|---|---|
| (ஈ) | 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை யின் 03 ஆம் பிரிவு | குறித்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்பாக பின்னிணைப்பு 01 இலுள்ள படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய இன் 6/97 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு மற்றும் தாபனவிதிக் கோவையின் vii, 12 ஆம் நியதி | மீளாய்வாண்டில் உரிய ஏற்பாடுகளுக்கு முரணாக பதில் கடமை படியாக மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 213,832 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | கொள்வனவு கைநூலின் 3.5 ஆம் பிரிவு மற்றும் வழிகாட்டி கோவையின் 2.14 ஆம் பிரிவு | குளிர்காப்பு இயந்திரங்களுக்கு மின்சார வழங்கல் தொடர்பாக ரூபா 293,040 பெறுமதியான வேலைகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.<br>- கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாமை.<br>- கொள்வனவுக் குழு இனங்காணப்படாமை.<br>- தொழிநுட்ப மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்படாமை. |
| (எ) | 2007 நவம்பர் 01 ஆம் திகதிய 8-1/1-73 ஆம் இலக்க மற்றும் அமைச்சு சுற்றறிக்கை | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் பொது 268 படிவத்தின் பிரகாரம் பராமரிக்கப்பட வேண்டிய போதிலும், சதோசவினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மாத இறுதி யிலான எரிபொருள் கிரயம், எரிபொருள் தாங்கியின் கொள்ளளவு, ஆரம்ப மற்றும் |

| | |
| --- | --- |
| | இறுதி எரிபொருள் மீதி, ஈடுபடுத்தப்பட்ட இன்ஜின் ஒயில் போன்ற போதியளவு தகவல்கள் இல்லாத வகையில் ஓட்டப்பதிவேடுகள் பேணப்பட்டிருந்தது. |
| (ஏ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நி.பி 103 | 09 சந்தர்ப்பங்களில் நிறுவனத்தின் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி அதில் 05 சந்தர்ப்பங்களில் புதுப்பித்தலுக்காக ரூபா 85,085 செலவிடப்பட்டிருந்ததுடன், அந்நட்டம் காப்புறுதியின் மூலம் தீர்த்துவைக்கப்பட்டதாக முகாமையினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் நி.பி 103 இன் பிரகாரம் செயற்படாதிருந்தமையினால் வாகனங் களின் நட்டம் மற்றும் அதனைத் தீர்த்து வைத்தல் தொடர்பான சான்றுகளைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் உருவாகியிருந்ததுடன் எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (i) நி.பி 103(1) | சொத்துக்களின் நட்டம் தொடர்பாக உரிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கு ரூபா 5,097,455 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 12 கென்வேயர் இயந்திரங்களில் 11 இயந்திரங்களின் மின்சார மோட்டார்கள் காணாமல் போயிருந்தன. மேலும் அத்தகைய நட்டத்தின் அளவைத் தீர்மானித்து அதற்குப் பொறுப்பானவர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. போதிலும், உரிய உத்தியோகத்தர்கள் சுயவிருப்பின் பேரில் இளைப்பாறிச் சென்றமையால் பொறுப்பான நபர்களை |

இனங்காண்பது சாத்தியமற்றது என தலைவரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (iii) நி.பி 133 | | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று தோற்றுவிக்கப்பட்டு கணக்காய்வு மேற்கொள் எப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி 137,138,228,245(1) | (i) | ஏற்பாடுகளுக்கு முரணாகவும் விலை கோரப்படாமலும் இரண்டு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 60,160 செலுத்தி இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| | (ii) | தாபனத்தின் நிர்வாக மற்றும் கட்டமைப்பு மாற்றங்களை உள்ளடக்கிய முக்கியமான ஆவணங்களின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென பல ஆண்டுகளாக கணக்காய்வினால் முகாமைக்கு சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனைக் கருத்திற் கொள்ளாமல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய பிரதிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (v)நி.பி 225(4) | | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை தயாரிக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் அவற்றினை சரி பிழை பார்க்கும் உத்தியோகத்தர்கள் அவற்றில் சுருக்க கையொப்பம் இட்டிருக்கவில்லை. |
| (vi) நி.பி 245(1) மற்றும் 257 | | சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தர் களால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |

(vii) நி.பி 261(3)

கொடுப்பனவிற்காக போதியளவு பணம் இருக்க வேண்டியதுடன், அதற்காக நாளாந்தம் காசேட்டின் தொகைகள் சரி பார்க்கப்பட்டு மீதி அறிந்து கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வங்கிக்கூற்றின் மீதியை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக முகாமையினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(viii) நி.பி 264(1)

(i) ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 196,782 தொகையான கொடுப்பனவுகளுக்குரிய பணம் பெற்றுக்கொண்டமைக்கு பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏற்பாடுகளின் பிரகாரம் வேலைகள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் போது அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 181,026 தொகைக்காக, வழங்குனர் பணத்தைப் பெற்றுக்கொண்டதாக பற்றுச்சீட்டொன்றை கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் இணைத்து சமர்ப்பிக்காமல் இருந்ததுடன், உறுதிப் படுத்தப்படாத பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன.

(ix) நி.பி 272(1)

கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடரிலக்கத்தின் அடிப்படையில் கோவைப்படுத்தி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (x) நி.பி 272(3) | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக் களையும் குறித்த மாத இறுதியிலிருந்து ஆறு வாரங்கள் முடிவடை வதற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், உரிய நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (xi) நி.பி 454 | பொது 44 படிவத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன், 2011 மார்ச் 11 ஆம் திகதியளவில் தாபனம் அறிமுகப்படுத்திய முறையான படிவமும் நிலையான சொத்துப் பதிவேடும் பேணப் பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் காணப்படுதல் அதிகளவிலான ஆபத்திற்கு உள்ளாகியிருப்பது கணக்காய்வின் போது மறுக்க முடியாததாக இருந்தது. |
| (xii) நி.பி 754 மற்றும் 757(1)(அ) | ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னேகமுவ அரிசி ஆலைத்தொகுதியின் பொருட் இருப்பு பதிவேடு உரிய வகையில் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (xiii) நி.பி 756 | பொருள் கணிப்பீட்டுச் சபையொன்று நியமிக்கப்பட்டு பன்னேகமுவ களஞ்சியத்தொகுதியின் சொத்துக்கள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (xiv) நி.பி 757(2)(அ) | வருடாந்த மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (xv) நி.பி 785(4) | வாகனப் பதிவேடொன்று பராமரிக்கப் பட்டோ அல்லது ஒவ்வொரு வாகனங் |

களுக்குரிய கோவைகள் வெவ்வேறாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை

**2.2.8 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 2,741,431,049 பெறுமதியான 19 சொத்துக் கணக்குகளின் மீதிகள், ரூபா 1,627,995,005 பெறுமதியான 09 பொறுப்புக் கணக்குகளின் மீதிகள், ரூபா 372,231,466 தொகையான 02 வருமானக் கணக்குகளின் மீதிகள் ரூபா 358,581,020 பெறுமதியான 22 செலவினக் கணக்கு மீதிகள் மற்றும் ரூபா 381,812,395 கூட்டுத்தொகையான வேறு கணக்கு மீதிகள் ஆகியவற்றின் மொத்தம் ரூபா 5,482,050,935 மொத்த தொகை தொடர்பாக சான்றுகள் இன்மையால் அவ்விடயங்களை திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய / மெய்மையாய்வு செய்ய அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்துடன், சமர்ப்பிக்கப்பட்ட பதில் மூலம் போதியளவு தகவல்கள் முகாமையால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதி மீளாய்வு**

**3.1.1 நிதி செயலாற்றல்**

(அ) மீளாய்வாண்டின் போது தாபனத்தின் செயற்பாடல்லாத வருமானங்களை உள்ளடக்கிய ஏனைய வருமானங்களின் பின்னர் தேறிய இலாபம் ரூபா 2,300,113 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 46,000,886 ஆக இருந்தது. எனினும் தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைளின் விளைவு ரூபா 184,325,627 தேறிய நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் தேறிய நட்டம் ரூபா 195,717,615 ஆக இருந்தமையால் தேறிய நட்டம் ரூபா 11,391,988 ஆல் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்நிலைமையால் விற்பனை 208% ஆல் அதிகரித்தும், செயற்பாட்டுச் செலவினம் 3.2% ஆல் குறைவடைந்ததன் அடிப்படையில் வியாபார இலாபம் அதிகரித்தும் மீளாய்வாண்டில் நிதிக் கிரயம் ரூபா 2,840,131 ஆல் குறைவடைந்துமிருந்தன..

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் தேறிய விற்பனை ரூபா 125,383,394 ஆல் அதாவது 208% ஆல் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மொத்த இலாபத்தில் அதிகரிப்பொன்று தென்பட்டதுடன், அதனால் 2009 ஆம் ஆண்டின் 1.9% ஆன மொத்த நட்ட விகிதம் மீளாய்வாண்டின் போது 1.1% மொத்த இலாப விகிதமாக மாறியிருந்தது.

(இ) வாடகை வருமானத்தில் 0.8% அதிகரிப்பொன்று சுட்டிக்காட்டட்டிருந்ததுடன், ரூபா 124.5 மில்லியனை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

### 3.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முக்கியமான விகிதங்களில் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2010 | 2009 |
|---|---|---|---|
| * | <u>இலாப விகிதம்</u> | | |
| | மொத்த இலாபம்(நட்டம்) | 1.1% | (1.9%) |
| | செயற்பாட்டு இலாபம்/ (நட்டம்) | (100%) | (330%) |
| | தேறிய இலாபம்/(நட்டம்) | (207%) | (654%) |
| * | திரவ விகிதம் | | |
| | - நடைமுறை | 0.48:01 | 0.49:01 |
| | - விரைவுச் சொத்து | 0.40:01 | 0.48:01 |
| * | விற்பனைக்கான செயற்பாட்டுச் செலவுகள் விகிதம் | (90%) | (288%) |

(அ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் உரிமை மூலதனம் 31% ஆல் குறைவடைந்திருந்த போதும், கடன்கொடுத்தோர் ரூபா 542,164,547 ஆல் பதிவழிக்கப்பட்டமையும் உண்டியல்களுக்கான வட்டி வருமானம்

ரூபா 161,906,344 ஆல் அதிகரித்திருந்தமையும் அதற்கான காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது தாபனத்தின் நடைமுறைச் சொத்துக்கள் 27.43% ஆல் குறைவடைந்த தாக்கத்தின் அடிப்படையில் தொழிற்படு மூலதனம் 21.26% ஆல் குறைவடைந்திருந்தது.

தாபனத்தின் இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை என்பன செயற்பாட்டு நடவடிக்கைகளில் பாதகமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததுடன், அதன் காரணமாக நிறுவனத்தின் எதிர்கால நிலைமை தொடர்பாக அதிகளவிலான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமை விகிதப் பகுப்பாய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 பௌதீக செயலாற்றல்

**கூட்டுத் திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும்**

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் தேவைப்பாட்டிற்கு இணங்காத வகையில் 2007 முதல் 2010 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட முறையற்ற கூட்டுத்திட்டமொன்று 2009 திசெம்பர் 09 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், செயல் நடவடிக்கைத் திட்டமும் பூரணமற்றதாகவும் இலக்கை உரிய வகையில் நிர்ணயிக்காதும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பன்னேகமுவ நெல் ஆலைத்தொகுதியின் நெற் களஞ்சியப்படுத்தல் உட்பட அரிசி உற்பத்தியை இலக்காகக் கொண்ட கூட்டுத்திட்டமொன்று தாபனத்திடம் காணப்படவில்லை. 1,000,000 கி.கிராம் இயலளவைக் கொண்டுள்ள நெற் களஞ்சியம் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக எவ்வித கட்டணமும் அறவிடப்படாதிருந்ததுடன், வளங்களை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு முகாமை தவறியிருந்தது.

(இ) முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை செயற்படுத்தாமையால் 2009 ஆம் ஆண்டின் போது நெல் கொள்வனவு

மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டின் போது நெற் கொள்வனவு மற்றும் அரிசி விற்பனையும் குறைவடைந்திருந்தது.

(ஈ) 2010 ஆம் ஆண்டிற்காக மிகவும் பலவீனமான மற்றும் முறையற்ற செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமையால் அதன் மூலம் உள்நாட்டு ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகள் எது வெளிநாட்டு சந்தையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு எதுவென இனங் காணப்பட்டிருக்கவில்லை. அதில் நிறுவனத்தின் பொதியிடல் அலகு, போக்குவரத்துப் பிரிவு மற்றும் அரிசி செயற்பாட்டு நிலையங்களின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு எதுவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2010 ஆம் ஆண்டில் விற்பனை வருமானத்தில் 208% அதிகரிப்பு தென்பட்டபோதிலும், 2010 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்த்த விற்பனை வருமானம் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் முறையே 86.5% ஆலும் 31% ஆலும் குறைவினைக் காட்டிருந்தது. அதன் பிரகாரம் தாபனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்திலிருந்து அதிக தொலைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் வியாபாரப் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதன் மூலம் ரூபா 168,784,500 வருமானமொன்று எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் ரூபா 20,830,500 மொத்த இலாபமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டின் திசெம்பர் வரையில் அந்த இலக்கு எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(எ) நிறுவனத்தின் சகல கொள்வனவுகளும் 2010 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டிலேயே உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குப் புறம்பாக ரூபா 262,219,083 பெறுமதியான 10 வகைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

நிதிச் சிக்கல்கள் காரணமாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று சமர்ப்பிக்க முடியாதிருந்ததாகவும் அதனால் அது மற்றும் அது தொடர்பான செயற்பாட்டு

நடவடிக்கைளையும் திட்டமிட முடியாதிருந்ததாக முகாமையால் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 3.2.2 செலுத்த வேண்டிய பிணைக் கடன்கள் (மக்கள் வங்கி)

2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் அரிசி மற்றும் கோதுமை மா இறக்குமதி செய்வதற்காக திறைசேரி பிணையங்கள் மீது தாபனத்திற்கு மக்கள் வங்கி பிணைக் கடன் வசதிகளை வழங்கியிருந்தது. இந்த திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 207,050,943 ஆன மீதிகள் நிலுவையாக இருந்தன. போதுமான அளவு இலாபம் இன்மையாலும் நிதி சதோசவில் இல்லாமையாலும் இந்நிலைமை உருவாகியதாகவும் இது தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்திருப்பதாகவும் முகாமையினால் 2009 மார்ச் 19 ஆம் திகதிய பதில் கடிதத்தில் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 மே மாதம் இறுதி வரையில் அப்பெறுமதி மாற்றமின்றிக் காணப்பட்டது.

### 3.2.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) 510 ஆம் இலக்க களஞ்சிய தொகுதியில் காணப்படும் சதோசவிற்குச் சொந்தமான வியாபார இருப்புக்கள், ஏனைய சொத்துக்கள் மற்றும் களஞ்சியத்தின் பதவியணியினர் பௌதீக ரீதியாக இனங்காணப்படாமல் இலங்கை சதோசவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் 510 ஆம் இலக்க களஞ்சிய தொகுதியில் சதோசவிற்குரிய இருப்புக்கள், சொத்துக்கள் மற்றும் பதவியணியினர் என்பவற்றை குறிப்பாக இனங்காண்பதில் சிக்கல்கள் எழுந்திருந்தன.

(ஆ) அரிசி விற்பனையின் போது அந்த அரிசியின் விலை விபரங்கள் மற்றும் விற்பனை அளவுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் இலங்கை சதோசவின் தற்றுணிபின் பேரல் இடம்பெற்றிருந்தது.

(இ) சுயமாகவே ஓய்வுபெறும் முறைமையின் கீழ் 2004 ஆம் ஆண்டு விலகிய ஊழியர்களுக்கு பணிக்கொடை மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு முன்னர் அவர்களிடமிருந்து நிறுவனத்தினால் அறவிடப்பட வேண்டிய பணம் ஒப்படைக்க வேண்டிய சொத்துக்கள் வைப்புக்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை உரிய வகையில் நிறுவனத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா என தற்போதய முகாமைத்துவம் போதுமான உறுதிப்படுத்தலை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிகாரியால் 55 வயதை அடையும் ஊழியர்களை ஓய்வு பெறச் செய்வதற்காக நிர்வாகப் பகுதியின் 2002 யூன் 21 ஆம் திகதிய 27/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஓய்வுபெறுவதற்கு எதிராகவும் வேறு காரணங்களுக்காவும், தாபனத்திற்கு எதிராக தொடரப்பட்ட 40 வழக்குகள் 2009 ஆம் ஆண்டின் இறுதி வரையில் தீர்ப்பு வழங்கப்படாதிருந்ததுடன், அவ்வழக்குகளின் நிலைமை தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில் நட்டஈடு வழங்க வேண்டியிருந்த 170 வழக்குகளுக்காக தாபனம் ரூபா 34,109,357 இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கெதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளின் எண்ணிக்கை அல்லது தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1985 சனவரி 01 இல் காலி வீதி 401 மற்றும் 407 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கட்டிடங்களின் தள மாடி மற்றும் இரண்டாம் மாடிக்காக உடன்படிக்கை செய்யப்பட்டவாறு வாடகை செலுத்தாமை தொடர்பில் தாபனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கிற்காக 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 6,034,000 தொகை இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு கட்டளையிடப்பட்டிருந்ததுடன், அத்தொகையைக் கொடுப்பனவு செய்யாமையால் தாபனத்திற்குச் சொந்தமான ரூபா 12,275,000 பெறுமதியான 35 மோட்டார் வாகனங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக ரூபா 15 மில்லியன் தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்த போதிலும், ரூபா 9 மில்லியன் கொடுப்பனவு செய்து இணக்கப்பாடொன்றிற்கு வருவதற்கு உரிய தரப்பினருடன் உடன்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2012 யூலை 05 ஆம் திகதி வரையில் எவ்வித தகவல்களும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(எ) பட்ஜெட் கடைகளினை நடாத்திச் செல்வதற்காக கட்டிடத்தை வாடகைக்கு வழங்கும் போது தொடர்புபட்ட பகுதியினருடன் முறைப்படி உடன்படிக்கை செய்யப்பட்டிருக்காததுடன், அரச மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடு ஒன்றை பெறாமல் வாடகை தீர்மானிக்கப்பட்டிருந்தது. அமைச்சின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள நேர்ந்துள்ளமையால் முறைப்படி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு காலம் போதியதாக இல்லையென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய அமைச்சின் தீர்மானம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வியாபார, வர்த்தக, நுகர்வோர் அலுவல்கள் மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தலின் அடிப்படையில் தாபனத்தினால் 2006 செப்தம்பரில் ரூபா 14,501,998 கிரயத்தில் 140 அரிசி குற்றும் இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட கடன் அடிப்படையில் பொலன்னறுவை, அம்பாறை, அநுராதபுரம் ஆகிய அரிசி உற்பத்தி செய்யும் பிரதேசங்களிலுள்ள 25 விவசாயிகளுக்கு 25 அரிசி குற்றும் இயந்திரங்கள் பகிந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், மக்கள் வங்கியால் முன்வைக்கப்பட்ட கடன் நிபந்தனைகளுக்கு இணங்காமையால் மேற்படி 25 இயந்திரங்களும் திரும்ப பெறப்பட்டிருந்தன. கூட்டுறவு அமைச்சால் அமுல்படுத்தப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு இந்த இயந்திரங்களை ஒப்படைத்து பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ஒரு இயந்திரம் மட்டும் விற்கப்பட்டு 2010 ஆம் ஆண்டின் இறுதிவரை எஞ்சிய 139 அரசி குற்றும் இயந்திரங்கள் தொடர்பாக பயனுள்ள நடவடிக்கையொன்று எடுக்கப்படாமல் ச.தோ.ச 510 ஆம் இலக்க களஞ்சியத்தில் கணக்காய்வு திகதி வரையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

### 3.2.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபனத்திற்குச் சொந்தமான 12 கட்டிடங்கள் அதன் துணைக் கம்பனி ஒன்றான வ/ப லங்கா சதோச கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தின் வாடகை தொடர்பாக அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக சரியான மதிப்பீடொன்றை பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்த போதிலும், 2012 யூலை 05 ஆம் திகதி வரை சரிப்படுத்தலை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2006 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2010 திசெம்பர் 31 வரை வ/ப லங்கா சதோச கம்பனியிடமிருந்து பெறவேண்டிய கட்டிட வாடகை ரூபா 41,893,201 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கட்டடத்தை வாடகைக்கு வழங்கிய 2006 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2012 யூலை 05 ஆம் திகதி வரை வாடகை எதனையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் இருந்தும், சதோச நிறுவனத்தால் தற்போது பயன்படுத்தப்படும் எஞ்சிய களஞ்சியத்தையும் எத்தொகையும் அறவீடு செய்யாமல் இலங்கை சதோச நிறுவனத்தின் களஞ்சியப்படுத்தலுக்கு வழங்குவதற்கு முகாமை நடவடிக்கை எடுத்திருந்தது.

(இ) வ/ப லங்கா சதோச கம்பனியின் தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டிருந்த தாபனத்திற்குரிய கட்டிடத்தின் 6000 சதுரஅடி அளவிலான நிலத்தை குறித்த கம்பனி பயன்படுத்தியிருந்த போதிலும் 2,350 சதுரஅடிக்காக மட்டுமே வாடகை கணிப்பிடப்பட்டிருந்தது. மேலதிக இடவசதிக்காக வாடகையை அறவிடுவதற்காக 2010 ஆம் ஆண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்ததாக 2011 திசெம்பர் 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த தொகையை அறவிடுவதற்கான உறுதிப்படுத்தல் எதுவும் எடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.5 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 25,521,569 பெறுமதியான இயந்திர வேலைத்தளமும் 1,000,000 கி.கி நெல் களஞ்சியப்படுத்தக்கூடிய களஞ்சியத் தொகுதியும் 350,000 கி.கி கொள்ளளவுடைய அரிசி களஞ்சியத்தையும் கொண்டுள்ள பன்னேகமுவ நெல் ஆலைத் தொகுதி பயன்படுத்தப்படாமலும் குறைப்பயன்பாட்டிற்கும் உட்பட்டிருந்தன.

(ஆ) தாபனத்தினை மீளமைத்தலின் கீழ் சில்லறை வியாபாரத்தினை சதோச ரீடேல் லிமிட்டெட்டிற்கு வழங்கியதாலும் மொத்த விற்பனை வியாபாரம் வீழ்ச்சியடைந்ததாலும் தாபனத்தின் ஊழியர்கள் சுயமாக ஓய்வுபெறச் செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறு வியாபார நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டதால் ரூபா 682,063,488 கிரயமான நிலையான சொத்துக்கள் 2004 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாதிருந்தமையும் குறைவாகப் பயன்படுத்தியிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. செயற்பாடற்ற சொத்துக்களை கைதவிர்ப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக 2009 மார்ச் 19 ஆம் திகதிய பதில் கடிதத்தில் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய சரிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்களின் அடிப்படை வசதிகள் முகாமையால் கணக்காய்விற்கு வழங்கப்படாதிருந்ததுடன், எழுத்துமூல உறுதிப்படுத்தல் சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தாபனத்தினை மீளமைத்தலின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 11 கம்பனிகளில் சதோச ரீடேல் லிமிட்டெட் கம்பனி நட்டம் அடைந்த காரணத்தால் 2005 யூனிலிருந்து வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2006 ஒக்டோபர் 23 ஆந் திகதிய கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் அக் கம்பனியை கலைப்பதற்கு கட்டளை பிறப்பித்திருந்தது. மேலும், ஏனைய 10 கம்பனிகளும் பெயரளவில் மட்டும் இருப்பதன் காரணமாக அந்தக் கம்பனிகளிடமிருந்து பெற வேண்டியவையாக 2009 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 523,821,349 தொகையான நடைமுறைச் சொத்துக்கள் 2010 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், அச்சொத்துக்களை பதிவழிப்பதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம், கணக்கீடு செய்வதற்கான உரிய நாட்குறிப்புப் பதிவுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட 104 வாகனங்களில் ரூபா 12,685,000 பெறுமதியான 58 வாகனங்கள் செயற்பாடற்று காணப்பட்டதுடன், அதில் ரூபா 125,000 பெறுமதியான 03 வாகனங்கள் நிறுவனத்தில் இருப்பதற்கோ விற்பனை செய்யப்பட்டமைக்கோ அல்லது கைதவிர்க்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தாபனத்தால் 2007 திசெம்பர் 31 வரை ரூபா 32,074,662 பெறுமதியான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமல் வ/ப இலங்கை சதோச கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக பணம் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது கம்பனியின் பங்குகளை பெற்றுக் கொள்வதற்கோ உடன்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. மேலும் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் ஒப்படைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் தொடர்பாக பதிவேடுகளைப் பராமரிப்பதோ அல்லது அது தொடர்பான தகவல்களையோ 2012 யூலை 05 ஆம் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தலோ இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன், பூரணமற்ற பதிவேடொன்று 2011 திசெம்பர் மாதத்தின் போது கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2010 ஆம் ஆண்டிலும் தாபனத்தின் நிலையான பொது மேந்தலைக் கிரயம் ரூபா 85,110,614 ஆன தாபனத்திற்குச் சொந்தமான 02 நெல் குற்றும் ஆலைகள் செயற்பாடற்று குறைவாகப்பயன்படுத்தப்பட்டு காணப்பட்டமையால் குறித்த பிரிவுகளின் உழைப்பும் பயன்படுத்தப்படாத நிலைமையில் காணப்பட்டது. நிதிச்சிக்கல்கள் காரணமாக நெல் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து கடன் அடிப்படையில் நெல் கொள்வனவு செய்யப்படுவதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக முகாமையால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 3.2.6 மீள்கட்டமைப்பு கொடுக்கல் வாங்கல்கள்

தாபனத்தின் மீள்கட்டமைப்பு 2003 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2003 திசெம்பர் 01 இல் உள்ளவாறு 06 வர்த்தக வங்கிகளுக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 5,493 மில்லியன் கடன் தொகையினை, ரூபா 4,397 மில்லியன் ஆக திருத்துவதற்கு குறித்த வர்த்தக வங்கிகள் உடன்பட்டு அத்தொகையை 13 ஆண்டுகளில் செலுத்தும் வகையில் திறைசேரி முறிகள் அந்த வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

தாபனத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்களில் ரூபா 1.8 பில்லியன் பெறுமதியான சொத்துக்கள் பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் ஊடாக விற்பனை செய்யப்பட்டு கிடைக்கும் தொகையிலிருந்து 2005 ஆம் ஆண்டில் மேற்படி திறைசேரி முறிகளைத் தீர்ப்பதற்கும் உடன்பட்டது. மேலும் அக் கடனுக்காக அரையாண்டு வட்டியைச் செலுத்துவதற்கும், அவ்வாறு செலுத்த வேண்டிய வட்டியின் 50% சதவீத்தை திறைசேரி செலுத்துவதற்கும்

எஞ்சிய 50% சதவீதத்தை ச.தோ.ச இற்கு சொந்தமான சொத்துக்களை ச.தோ.ச ரீடேல் கம்பனிக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வாடகை வருமானத்திலிருந்து செலுத்தவும் உடன்பட்டது. அதன் பிரகாரம் திறைசேரி முறிகள் மீது 13 ஆண்டுகளிற்காக செலுத்தவேண்டிய வட்டியாக ரூபா 4,209,564,684 தொகை மற்றும் அது தொடர்பாக திறைசேரி முறிகளை 8.5% சதவீதத்தில் கழிவு செய்யப்பட்டு தற்போதைய தேறிய பெறுமதியில் கணிப்பிடப்பட்ட ரூபா 1,522,544,041 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், மீள்கட்டமைப்பின் கீழ் திறைசேரி முறிகள் தொடர்பான பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்காக பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொத்துக்கள் எதுவும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. 2004 பெப்ரவரி 03 ஆந் திகதிய 04/0103/136/007/ஈபீசீ/710 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி தாபனத்தை கலைப்பதற்குத் தீர்மானித்திருந்த போதிலும் 2004 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 04/0892/0121/011 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி தாபனத்தை கலைப்பதனை இடை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மேலும், தாபனத்தின் மீள் கட்டமைப்பில் உடன்பட்டவாறு வர்த்தக வங்கிக்கு 2004 மே 14 இலிருந்து அரையாண்டு வட்டியில் 50% சதவீத கொடுப்பனவு சதோசா ரிடேல் கம்பனியிலிருந்து வாடகை வருமானம் கிடைக்கப் பெறாததன் காரணமாக தாமதமாக்கப்பட்டிருந்ததுடன், குறித்த இரண்டு வர்த்தக வங்கிகளால் கடன் வட்டியை அறவிடுவதற்காக கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தன. அந்த வழக்குத் தீர்ப்பின்படி, 2006 மே 14 வரை செலுத்த வேண்டிய வட்டியான ரூபா 128,625,588 தொகை இரண்டு வர்த்தக வங்கிகளுக்கும் செலுத்தப்பட்டிருந்ததுடன், அத்தொகை நிதிக்கூற்றுக்களில் நீண்டகால பொறுப்புக்களிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

தாபனத்தின் மீள்கட்டமைப்பின் கீழ் திறைசேரியால் வழங்கப்பட்ட பிணைமுறிகள் தொடர்பில் செலுத்த வேண்டிய தொகையை, தாபனத்தின் சொத்துக்களை பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு ஊடாக விற்பனை செய்து கிடைக்கும் வருமானத்திலிருந்து பொதுத் திறைசேரிக்கு மீண்டும் செலுத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பண மீளளிப்புச் செய்யப்படாமல் தாபனத்தை மூடுவதற்கான தீர்மானத்தை இரத்துச் செய்து புதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாபனத்தை மீண்டும் நடாத்திச் சென்றமையால்

திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ரூபா 4,397 மில்லியன் தொகையான திறைசேரி பிணை முறிகளின் பெறுமதி மற்றும் அதற்காக 13 ஆண்டுகளிற்காக செலுத்த வேண்டிய வட்டி அக்கடனுக்காக 8.5% சதவீதத்தில் கழித்து மதிப்பிடப்பட்ட அந்தக் கடன்களின் தற்போதய பெறுமதியான ரூபா 4,922,577,055 தொகை 2009 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன், திறைசேரியால் அதற்காக 2009 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,133,344,338 தொகையான பங்களிப்பினை வழங்கியதன் காரணமாக அப்பெறுமதி இனங்காணப்படாத ரூபா 50 ஆன வித்தியாசமும் 2010 ஆம் ஆண்டின் போது திறைசேரியிடமிருந்து கிடைத்த ரூபா 161,906,334 தொகையான பங்களிப்பின் கீழ் 2010 திசெம்பர் 31 இல் ரூபா 3,627,326,333 ஆக இருந்தது. மேலும் திறைசேரி பங்களிப்புக்களின் வேறுபாடு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.7 முதலீடுகள்

தாபனத்தினால் 2 கம்பனிகளில் முறையே ரூபா 171,928,690 மற்றும் ரூபா 9,923,710 தொகைகளாக ரூபா 181,852,400 மொத்த தொகை 1999 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு கம்பனி நட்டமடைந்ததன் காரணமாக 2005 யூனிலிருந்து செயற்பாடற்று இருந்தமையால் 2006 ஒக்டோபர் 23 இல் கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் கலைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. அதில் முதலீடு செய்யப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டதுடன், மற்றைய கம்பனியிலும் உரிய முதலீடுகளுக்காக 1999 முதல் 2010 வரையான காலப்பகுதிக்காக எந்தவித பங்கு இலாபமும் பெறப்பட்டிருக்கவில்லை. இம்முதலீட்டை பதிவழிப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எதிர்வரும் காலங்களில் எடுப்பதாக முகாமையால் 2009 யூலை 24 ஆம் திகதிய பதில் கடிதத்தில் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டின் இறுதி வரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.8 வாகனங்களின் பாவனை

(ஆ) தாபனத்தின் போக்குவரத்துப் பிரிவில் இருந்த 104 வாகனங்களில் ரூபா 11,673,000 பெறுமதியான 45 வாகனங்கள் 2006 ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்பற்ற வகையிலும் பயன்படுத்தாமலும் இருந்ததுடன், ரூபா 1,012,000 பெறுமதியான 13 வாகனங்கள் 2006 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) முன்னைய ஆண்டுகளிலும் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்கள் என்பவற்றில் குறிப்புக்கள் இடல் முறையற்ற விதத்திலும் உரிய மேற்பார்வையுடன் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் மேற்கொள்ளாதிருக்கையில், மீளாய்வாண்டின் போதும் ச.தோ.ச. இனால் பிரயாணச் செலவினம், இணைந்த படி உட்பட வாகன ஓட்டச் செலவினமாக ரூபா 3,970,099 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.2.9 ஊழியர் பணிக்கொடைக்காக நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் இளைப்பாறும் அல்லது சேவையிலிருந்து விலகும் ஊழியர்களுக்காக 2010 இறுதி வரையில் ரூபா 26,193,506 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பணிக்கொடைக் கொடுப்பனவினை மேற்கொள்வதற்காக எதிர்கால கடப்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்கு நிதியமொன்று உருவாக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.2.10 பயனற்ற செலவினம்

பன்னேகமுவ அரிசி ஆலையில் ரூபா 4,190,916 தொகையான நெல் குற்றும் செலவினத்தில் ரூபா 3,200,000 தொகை செயற்படாத காலப்பகுதிக்காக செலவிடப்பட்ட பயனற்ற செலவினமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந்நிலைமை நெல் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து வழங்கப்படும் நெல்லின் அளவின் அடிப்படையிலேயே நெல் ஆலை செயற்பாடு நடைபெறுவதாக தலைவரால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

### 3.2.11 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம் பேக்கரி உற்பத்திகளின் விற்பனையிலிருந்து ரூபா 1,695,652 தொகையான மொத்த இலாபம் காணப்பட்ட போதிலும், விற்பனைத் தொகை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டதாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படாத எல்லை கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ரூபா 236,880 முதல் ரூபா 1,321,285 வரையில் பரவிக் காணப்பட்டது.

| பணத்தைப் பெற்றுக் கொள்பவரின் நாளாந்த பத்திரத்தின் பிரகாரம் வங்கியி லிடப்பட்ட விற்பனைப் பெறுமதி | கணக்குப் பிரிவின் தகவல்களின் பிரகாரம் வங்கியிலிடப்பட்ட விற்பனைப் பெறுமதி | வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பற்றுச் சீட்டின் பிரகாரம் வங்கியி லிடப்பட்ட விற்பனைப் பெறுமதி | வங்கியில் வைப்புச் செய்யப்படாததாக அவதானிக்கப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11,956,043 | 13,040,448 | - | 1,082,405 |
| 11,956,043 | - | 11,719,163 | 236,880 |
| - | 13,040,448 | 11,719,163 | 1,321,285 |

இதன் பிரகாரம் பேக்கரி உற்பத்திகளின் கொள்வனவு மற்றும் விற்பனை நடவடிக்கைகள் உரிய மேற்பார்வையின்றி இடம்பெற்றிருந்தது. 2011 ஏப்ரல் 04 ஆம் திகதிய CWE/GA/10/R-17 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிலின் பிரகாரம் அப் பணக்குறைவு ரூபா 496,706 எனவும் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பணப் பற்றாக்குறை தொடர்பாக உரிய தெளிவுபடுத்தலை மேற்கொள்ள முகாமைத்துவம் 2012 யூலை 05 ஆம் திகதி வரை தவறியிருந்தது.

### 3.2.12 இலக்குச் சந்தையை இனங்காணாத கொடுக்கல்வாங்கல்கள்

பன்னேகமுவ அரிசி தொகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி இருப்பினை ச.தோ.ச இன் பிரதான வாடிக்கையாளரான இலங்கை சதோச நிறுவனத்திற்கு விற்பனை செய்ய முடியுமா என்பது இனங்காணப்படாதிருந்ததுடன், கொள்வனவு செய்யப்படுகின்ற அளவு மற்றும் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்த விலை விபரங்கள் தொடர்பாகவோ அந்நிறுவனங்களுடன் இணக்கப்பாடொன்றிற்கு வந்திருக்கவில்லை. சந்தையில் அதிக விலையில் கேள்வியொன்று காணப்பட்ட போதிலும், இலங்கை சதோசவினால் 188,650 கி.கி. மட்டுமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உற்பத்தி செய்யப்பட்ட 528,550 கி.கி அரிசி இருப்பில் 339,900 கி.கி 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய கணக்காய்வுப் பரிசோதனைத் திகதி வரையில் களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததுடன் விற்பனை செய்யப்பட்ட அரிசிக்காக எவ்வித பணத்தையும் 2012 யூலை 05 ஆம் திகதி வரை அறவிடப்படாமல் இருந்ததாக கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. தவணை முறையில் பணம் அறவிடப்படுவதாக

முகாமையால் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் களஞ்சியத்தில் மீதியாகக் காணப்பட்ட 339,900 கி.கி அரிசி இருப்பு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றி 2012 யூலை 05 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

**3.2.13 இனங்காணப்பட்ட நட்டங்களும் சேதங்களும்**

---

(அ) இலங்கை சதோசவிற்காக அரிசி விற்பனை செய்வதில் முறையான கொள்கையொன்று அமுல்ப்படுத்தப்படாமையின் அடிப்படையில் அரிசி இருப்பானது சதோசவிற்குரிய களஞ்சியத்தில் மாதக் கணக்காக காணப்பட்டமையால் அவற்றின் நிறத்தில் மாற்றம் ஏற்பட்டமையாலும் கிலோவொன்று ரூபா 54 இற்கு விற்பனை செய்ய முடியுமாக இருந்த 7,550 கி.கி அரிசி ஒரு கிலோ ரூபா 35 ஆன குறைந்த விலைக்கு விற்பனை செய்தமையால் ரூபா 145,655 ஆன நிதி நட்டமொன்று இடம்பெற்றிருந்ததுடன், விற்பனை செய்யப்பட்ட அரிசிக்காக பண அறவீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தவிடு நீக்கப்படாத அரிசி 19 வீதம் போக்குவரத்துச் செலவொன்று இல்லாமல் பிரதேச கொள்வனவாளர் ஒருவருக்கு விற்பதற்கு இயலுமாக இருந்த போதும், அவ்வரிசி இருப்பை பன்னேகமுவவிலிருந்து கொழும்மில் அமைந்துள்ள 510 ஆம் இலக்க களஞ்சியத்திற்கு கொண்டு சென்றதன் பின்னர் ரூபா 13 அளவிலான ஆகக் குறைந்த விலைக்கு 10860 கி.கி உரிய கொள்வனவாளருக்கு சதோசவினால் 235 கிலோ மீற்றர் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது. 2012 யூலை 05 ஆம் திகதி வரை உரிய தொகையான ரூபா 141,180 கிடைக்கப் பெறவில்லை. அதன் பிரகாரம் தாபனத்திற்கு ரூபா 65,140 தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், கொள்வனவாளருக்குரிய போக்குவரத்துக் கட்டணத்தை மதிப்பீடு செய்து அல்லது நிர்ணயித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒரு கி.கி. 24.50 வீதம் 16,500 கி.கி கொள்வனவு செய்வதற்கு பிரதேச கொள்வனவாளர் கேள்விகளைச் சமர்ப்பித்திருந்த் போதிலும் அத்தவிட்டினை (குருனல்) விற்பனை செய்வதற்கு முகாமை நடவடிக்கை எடுக்காமல் இருந்ததுடன், அவ்வாறு விற்பனை செய்யாமைக்கான காரணமும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தாபனத்தினால் செட்டிகுளம் நிவாரணக் கிராமங்களுக்கு பேக்கரி உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு ச.தோ.ச விற்பனை நிலையங்களுக்கு அனுப்புவதற்காக பேக்கரி உரிமையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 77,490 கிரயத்திலான 246 கொள்கலன்களை 2012 யூலை 05 ஆம் திகதி வரை சதோசவிற்கு மீள ஒப்படைத்திருக்கவில்லை. அத்துடன் பொறுப்பானவர்கள் இனங்காணப்பட்டு குறித்த நட்டத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.14 வழங்கல் மற்றும் சேவைகள்

தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது ஒரு வழி மற்றும் இரு வழி மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக முறையற்ற நடைமுறையினைப் பின்பற்றி ரூபா 293,040 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2.15 தொடர்புடைய அரச கம்பனியின் கொடுக்கல்வாங்கல்கள்

2010 திசெம்பர் 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது 510 இலக்க களஞ்சியத்தில் வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (கூட்டுறவு மொத்த வியாபார) கம்பனிக்குச் சொந்தமான 197 மெட்ரிக் தொன் ரிகாத்த மல்லியும் 42 மெட்ரிக் தொன் கடலையும் காணப்பட்டது. மேலும் தாபனத்தினால் வரையறுத்த அரசாங்க வர்தக (கூட்டுறவு மொத்த வியாபாரம்) கம்பனியின் நிதிப்பிரச்சினை காரணமாக ரூபா 12,454,923 தொகையான இருப்புக்கள் விடுவிக்கும் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை, அக்கம்பனிக்குரிய மேற்குறித்த இருப்புக்களை சதோச களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தியிருந்தமை என்பன எந்த அடிப்படையில் அல்லது அங்கீகாரத்தின் கீழ் செய்யப்பட்டது என்பது நிரூபிக்கப்படாதிருந்ததுடன், தாபனத்தினாலேயே மொத்த வியாபார கொடுக்கல் வாங்கல்களையும் செயற்படுத்துவதன் மூலம் விளைதிறனை உருவாக்கக் கூடிய நிலைமையில் இருந்த போதும் அவ்வாறு செய்யாமல் இடைத்தரகர் சேவை வழங்குனர் ஒருவராக பயனில்லாத வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

### 3.2.16 தேசிய பொருளாதாரத்திற்கு தாபனத்தின் பங்களிப்பு

தேசிய பொருளாதாரத்திற்கு தாபனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பங்களிப்பினை வழங்குவதற்கு இயலாமையின் காரணமாக “தாபனத்தின் நிதிப் பிரச்சினை காரணமாக நடவடிக்கை எதனையும் கொண்டு நடாத்திச் செல்லும்

போது நடைமுறை ரீதியான சிக்கல்கள் உருவாகியுள்ளதாக" முகாமையால் அவ்வப்போது கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், முன்னர் ச.தோ.ச நிறைவேற்றிய நடவடிக்கைகளுக்காக தற்போது செயற்படுத்தப்படும் அரச கம்பனியை மிகைத்து ச.தோ.ச நிறுவனத்திற்கு நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய இயலுமை காணப்படுவதை பின்வரும் விடயங்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

(அ) அரச கம்பனிகளின் நிதிப் பிரச்சினைகளுக்காக நடவடிக்கை மேற்கொள்ளக்கூடிய தாபனமாக இருந்தமை உதாரணமாக:- வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக (கூட்டுறவு மொத்த வியாபாரம்) கம்பனிக்காக இறக்குமதி இருப்புக்களை விடுவிப்பதற்கான செலவினத்தை மேற்கொள்ளல்.

(ஆ) வரையறுக்கப்பட்ட கட்டிட பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்காக ரூபா 25 மில்லியன் கடனை வழங்குவதற்கான அமைச்சின் மேலதிகச் செயலாளரின் கோரிக்கைக்கு இணங்க ரூபா 10 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்தமை.

(இ) இலங்கை ச.தோ.ச கம்பனிக்கு சேவை வழங்குவதை இலக்காகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட பொதியிடல் பிரிவில் பயன்படுத்தப்படாதிருந்த மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்த உபகரணங்கள்/ சொத்துக்கள் என்பவற்றை ச.தோ.ச வினாலேயே பயன்படுத்தக்கூடியதாக இருந்தமை.

(ஈ) தற்போது திறைசேரி நிதிஏற்பாடு இல்லாமல் நாளாந்த செலவினத்தை மேற்கொள்வதற்கு தாபனத்திற்கு முடியுமாக உள்ளமை

(உ) தற்போது இலங்கை ச.தோ.ச கம்பனி உட்பட வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்துச் சேவைக்குப் பதிலாக ச.தோ.ச பிரதான வியாபார நடவடிக்கையான இலக்கான போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் செயற்பாட்டு இலாபத்தினை அதிகரித்துக் கொள்ளக்கூடிய இயலுமை.

(ஊ) அறவிடப்பட வேண்டிய ரூபா 861,725,558 தொகையான வருமானமொன்று தாபனத்திடம் காணப்படுகின்றமை.

(எ) அதிக அளவான கட்டிடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் என்பவற்றை பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய இயலுமை அல்லது தீர்வையாகக் கூடிய வருமானத்தை உழைக்கக் கூடிய ஆற்றல்.

அதன் பிரகாரம் நிதிப்பிரச்சினைகள் காணப்படுவதனால் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது என்பதனை முகாமைத்துவத்தின் பிரதிநிதித்துவம் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்ததுடன் தாபனம் தேசிய பொருளாதார நலனை நோக்கி செயற்படுத்துவதற்கு முகாமை போதியளவில் பங்களிப்பினை வழங்கவில்லை என்பதையும் கணக்காய்வின் போது மறுக்க முடியாது உள்ளது.

### 3.2.17 நிகழத்தக்க பொறுப்புக்களும் உரிய அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்களும்

### சொத்துக்களைக் கையேற்றல்

ச.தோ.ச. வினால் முறையற்ற உடன்படிக்கையினை மேற்கொண்டு 1992 ஆம் ஆண்டின் போது ரூபா 11,000 மாதாந்த வாடகையில் ஹிங்குரக்கொடையில் அமைந்துள்ள 02 களஞ்சியங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமல் இருந்த போதிலும், 1998 ஆம் ஆண்டிலிருந்து அவ்வாடகை ரூபா 50,000 இற்கு இணங்கப்பட்டு உரிய களஞ்சியங்கள் அவ்வாறே பேணப்பட்டு வந்ததுடன், எவ்வித வாடகையும் 2011 ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 9,192,000 தொகையான நிகழத்தக்க வாடகைச் செலவினமொன்று (பொறுப்புக்கள்) அவதானிக்கப்பட்டதுடன், உரிய அதிகாரமின்றி ரூபா 78,978,504 தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு நெல் குற்றும் ஆலையும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்நிகழத்தக்க வாடகைச் செலவினம் முழுமையாகவே நிதிக் கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

### 3.2.18 நியமனமும் பதவி உயர்வும்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படாதிருந்த போதிலும் உரிய அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் மட்டும் நிதி முகாமையாளர், சிரேஷ்ட முகாமையாளர் (நிர்வாகம்) மேலதிக பொது முகாமயாளர் ஆக 03 பதவி உயர்வுகளும் சட்டஉத்தியோகத்தராக ஒரு நியமனமும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக காலத்துக்கு காலம் தாபன தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) திட்டமிடல்
(ஆ) தாபன கட்டமைப்பு
(இ) பௌதீக கட்டுப்பாடு
(ஈ) செயலாற்றுகை
(உ) கடன்பட்டோர்
(ஊ) கடன்கொடுத்தோர்
(எ) நிலையான சொத்துக்கள்
(ஏ) உள்ளகக் கணக்காய்வு
(ஐ) பதவியணியினர்
(ஒ) வங்கிக் கணக்கிணக்கம்
(ஓ) இருப்புக் கட்டுப்பாடு
(ஔ) வாடகை வருமானம்
(க்) வாகனக் கட்டுப்பாடு
(க) ஆவணங்களின் பராமரிப்பு
(கா) கணக்கீடு
(கி) கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்
(கீ) சில்லறைக்காசேட்டு பராமரிப்பு

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இல. நிதிச்சட்டத்தின் பிரிவு 14 (2) (இ) இன் நியதிகளின்படி, 2010.12.31 இல் முடிடைந்த ஆண்டுக்கான கூட்டுறவுமொத்த விற்பனை தாபனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

2012 ஆம் ஆண்டின் ஜீலை 20 ஆம் திகதிய கடித இல.SC/E/CWE/FA/AMND/A/2010 தொடர்பாக,மேற்படி அறிக்கை தொடர்பான எமது அவதானங்களை இத்தால் சமர்ப்பிக்கின்றோம். அவை பின்வருமாறு

**தலைவரின் கருத்துரை**

2.2 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரை

2.2.1 நிதிக்கூற்றுக்ளைச் சமர்ப்பித்தல் :

(அ) 2011, நவம்பர் 11 சமர்ப்பிக்கப்பட்டது.
(CWE/GA/2011/ R-AR-14 ஆம் இல. கடிதம் தொடர்பானது)

(ஆ) விற்பனைச் செலவில் ஏற்பட்ட தாக்கமானது 1998.12.31 இற்கு முன்னதாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டது. அதன்பின்னர், எமது போட்டியாளர்களுக்கு இரகசிய தகவல்களைப் பேணும் வகையில் முகாமைத்துவமானது விற்பனைச் செலவில் ஏற்பட்ட தாக்கத்தினை கணக்குகளில் வெளியிட்டு பிரசுரிப்பதில்லை என முடிவெடுத்தது. எனவே கடந்த காலங்களில் நிதிக் கூற்றுக்களில் விற்பனைச் செலவின் தாக்கத்தனை நாம் காட்டியிருக்கவில்லை. விற்பனைச் செலவின் தாக்கமானது இணைப்பு இல. 01 இல் தரப்பட்டுள்ளது.

2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் :

(அ) இ.க.நி 03 பொது கணக்கீட்டுக் கொள்கைகள், சொத்துக்கள் மற்றும் பெறுமதி மதிப்பீடு, கடன் பொறுப்புக்கள் மற்றும் இலாப மற்றும் நட்ட ஏற்பாடுகள் என்பன தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 03 உடன் நாம் இணங்கிச் செயற்படுகின்றோம். (பக்கம் 5-6 மற்றும் 18-19 இனைப் பார்க்கவும்)

(ஆ) இ.க.நி 05 முன்னைய ஆண்டுகளைப் போலவே இருப்புக்களின் தேவைப்படுத்தல் வெளிப்படுத்துகையானது கொள்விலை அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் எது குறைவாக உள்ளதோ அப்பெறுமதியில் பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) இ.க.நி 09 மற்றும் 18 (i) நிலையான சொத்துக்களின் விற்பனை இலாபம் ரூபா.30, 709,278/- ஆகும். (10 ஆம் பக்கத்தினைப் பார்க்கவும்) 3 ஆம் பக்கத்திலுள்ள காசுப் பாயச்சல் கூற்றிலும் அதே தொகை காட்டப்பட்டுள்ளது.

(ii) மோட்டார் வாகனங்கள் 31.12.2009 மற்றும் 31.12.2010 இலுள்ளவாறு சுயாதீன மதிப்பீட்டாளர்களினால் பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளன. கணக்காய்வுக்கு அதனுடன் தொடர்புடைய விடயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (தயவு செய்து 2011.12.09 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்ட பதிலைப் பார்க்கவும். குறிப்பு இல. CWE/GA/ (F.A.10)/2011)

(ஈ) இ.க.நி. 36 (i) சட்டச் செலவுகளான ரூபா.1, 393,797/- நிருவாகச் செலவுகளாக காட்டப்பட்டுள்ளது. (08 ஆம் பக்கத்தினைப் பார்க்கவும்.) இக் கொடுப்பனவுக்கான உறுதிச் சீட்டு உள்ளது. 2011.11.21 ஆம் திகதியன்று கணக்காய்வுக்குரிய விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ii) நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் இழைப்பாறிய ஊழியர்களுக்கான கொடுக்குமதிகள் ரூபா 2.7 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது ஒப்படை பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களின் 18 ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.2.3 கணக்குகளில் குறைத்துக் காட்டுதலும் கூட்டிக் காட்டுதலும். :

2011இல் பொருத்தமான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு குறிப்பீடு செய்யப் பட்டுள்ளது.

### 2.2.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்கு :

(அ) தளபாடங்களும் உபகரணங்களும் : 2009.12.31 ஆம் திகதியிலுள்ளவாறான பேரேட்டு கணக்கு மீதியுடன் நிரல்படுத்தப் பட்ட மீதியானது இணங்கவில்லை.

2010.12.31 இலுள்ளவாறான பேரேட்டுக் கணக்கு மீதியுடன் நிரல் படுத்தப்பட்ட மீதியினை இணங்க வைப்பதற்கு நாம் பொருத்தமான சீராக்கல்களை

மேற்கொண்டிருந்தோம். தற்போதைய நிலையானது பின்வருமாறு:

| | 2010.01.01 இலுள்ளவாறான நிரல்படுத்தப்பட்ட மீதி | 2010.01.010 இலுள்ள வாறான பேரேட்டு மீதி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| | ----------- | ----------------------- |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 51,744,688/- | 51,744,688/- |
| திரண்ட தேய்மானம் | 50,194,287/- | 50,194,287/- |

எனவே நாம் நிரல்படுத்தப்பட்ட மீதியுடன் பேரேட்டு மீதியினை கணக்கிணக்கம் செய்துள்ளோம்.

(ஆ) தயவு செய்து 2011 நவம்பர் 01 ஆம் திகதி அனுப்பிய பதிலைப் பார்க்கவும் உசாத்துணை இல. CWE/GA/2011/R-AR-14

(இ) தயவு செய்து 2011 ஒக்டோபர் 31 ஆம் திகதி அனுப்பிய பதிலைப் பார்க்கவும் உசாத்துணை இல. CWE/GA/2011/R-AR-17

(ஈ) 12 மாதங்களுக்காக பேரேட்டினை அச்சிடுவது செலவு மிக்கதும் கடினமான வேலையுமாகும். எவ்வாறாயினும், 2010 ஆம் ஆண்டு பொதுப் பேரேட்டினை அச்சிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

<u>திருத்தியமைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2010</u>

(உ) வருமானக் கூற்று: நிதிக் கூற்றுக்களின்படியான மொத்த செலவினம் மீளசமர்ப்பிக்கப்பட்டது 165,319,509/-

25/02/2011 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட

நிதிக்கூற்றுக்களின் படியான மொத்தம் 165,172,151/-

வித்தியாசம் 147,358/-

இலக்கங்கள் 466508 மற்றும் 466510 ஆகியவற்றிலிருந்தான சில்லறை காசு முற்பணத்தினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பின்வரும் செலவுகள் 2011, பெப்ரவரி 25 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளை நிறைவு செய்வதற்கு முன்னதாக கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது.

| | கணக்கு இல. | தொகை |
|---|---|---|
| பிரயாணச் செலவு | 6171 | 6,200.00 |
| அமைய கூலிகள் | 6109 | 64,283.00 |
| நுகரக்கூடிய களஞ்சியங்கள் | 6272 | 14,600.00 |
| தொலைபேசி | 6241 | 8,440.00 |
| புதினப்பத்திரிகை | 6245 | 2,690.00 |
| மின்சாரம் | 6235 | 2,845.00 |
| தபால் செலவு | 6233 | 994.50 |
| ஏனையவை | 6274 | 47,306.98 |
| | | 147,359.48 |

(ஊ) தொடர்பற்றது. சரியான நிலையானது கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது 2011, ஒக்டோபர் 31 மற்றும் 2011 நவம்பர் 01 ஆம் திகதிகளில் அனுப்பிய கடிதங்களைப் பார்க்கவும்.

### 2.2.5 பெறத்தக்க மற்றும் செலுத்த்த்தக்க கணக்குகள்

(அ) நீண்டகாலமாக நிலுவையாயுள்ள வாடகையினைப் பதிவளிப்புச் செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய வருமதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் 12 மாதங்களுக்கான வாடகை அறவீடு செய்யப்பட்டுள்ளது. 2010.12.31 ஆம் திகதியிலுள்ள நிலுவை மீதியான ரூபா 1.7 மில்லியன் 2008 அம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரியதாகும்.

(இ) 2011.11.08. ஆம் திகதியன்று பதில் அனுப்பப்பட்டது.

### 2.2.6 காசு மற்றும் வங்கி மீதிகள்

பரீட்சை மீதி மற்றும் ஐந்தொகை ஆகியவற்றின்படியான கொமர்ஷல் வங்கி கணக்கு மீதி மற்றும் சேமிப்பு கணக்கு மீதி என்பன அவதானிக்கப்பட்டதுடன அவை பின்வருமாறு :

| | |
|---|---|
| சேமிப்பு க/கு | |
| (1545410) | 38,341,308.18 |
| நடைமுறை க/கு | |
| (1545428) | 16,298,762.49 |
| ஐந்தொகையின்படி | 54,640,070.67 |
| (பக்கம் 15) | ========== |

காசேட்டின்படியான மீதி பின்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| சேமிப்பு க/கு | 38,341,308.18 |
| நடைமுறை க/கு | 12,573,250.73 |
| | 50,914,558.91 |
| | ========== |

ரூபா.3, 725,511.76 வித்தியாசமானது ஓர் முறைமைத் தவறாகும் என்பதுடன் நாம் பரீட்சை மீதியின் மீதியினை சரியானதென எடுத்துள்ளோம். எவ்வாறாயினும், இவ்வித்தியாசம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் விரைவில் கணக்காய்வுக்கு அறிவிக்கப்படும்.

### 2.2.7 சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | | |
|---|---|---|
| (அ) | நிதிச்சட்டத்தின் 13 (5) (B)ஆம் பந்தி | நாம் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இல.நிதிச்சட்டத்தின்13 (5)(B) ஆம் பந்தியுடன் இணங்கியுள்ளதுடன் அது தொடர்பாக கணக்காய்பவபாளர் தலைமை அதிபதியினால் கோரப்பட்ட அனைத்து ஆவணங்கள் மற்றும் ஆதரவு அட்டவணைகளையும் சமர்ப்பித்துள்ளோம். |
| (ஆ) | 1949 ஆம் ஆண்டின் 47 ஆம் இல. கூட்டுறவு மொத்த விற்பனை தாபன திருத்தச் சட்டத்தின் 4 ஆம் பந்தி | கூமொதா இன் தலைவரே லக் சதொசவின் தலைவருமாவார். ஆகையால் உரிய உடன் படிக்கைகள் கூமொதா இன் பணிப்பாளர்களினால் கைச்சாத்திடப் பட்டுள்ளதுடன் கொடுக்கல் வாங்கல்கள் கூமொதா இன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| கூமொதா இன் தலைவரினால் கையெழுத்திடப்படாத லக் சதொச வுடனான மீள் வாடகை உடன்படிக்கை | கூமொதா இன் தலைவர் அச்சமயத்தில் லக் சதொசவின் தலைவராகவும் இருந்துள்ளதுடன் அவர் லக் சதொசவின் தலைவராகவே கையெழுத்திட்டுள்ளார் |

(இ) பொதுதொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இல.
2003 ஆம் ஆண்டின் ஜீன் 02 ஆம் திகதிய PED 12

| | |
|---|---|
| (i) பிரிவு 5.1.2. | ஒருங்கிணைந்த திட்டம் புதிப்பிக்கப்பட்டு |
| (ii) பிரிவு 5.1.3. | 2011,செப்ரெம்பர் 23 ஆம் திகதி சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| (iii) 1999 ஆம் ஆண்டின் ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/29 ஆம் இல. பொது நிருவாக சுற்றறிக்கையின் 5.2.2 மற்றும் 8.3.2 ஆம் பந்தி மற்றும் 1646 ஆம். இல. நிதிப்பிரமாணங்களின் பந்தி 1.3 | (i) கடந்த காலங்களில் கூமொதா ஆனது சில நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளதனால் நாம் அதே நடைமுறையினைப் பின்பற்றியுள்ளோம்.<br>(ii) வாகனம் பயணிக்கும் தூரத்தினை பதிவு செய்யும் பதிவேடுகள் போக்குவரத்துப் பிரிவிலுள்ளன. |

(ஈ) 2008 ஆம் ஆண்டின் 26 அம் திகதிய 13/2008 பொது நிருவாக சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு.

உரிய விதிகளின்படி, மீள் வடிவ இல.1 சமர்ப்பிக்கப்படவில்லை

(உ) 1997,பெப்ரவரி 03 அம் திகதிய 6/97 ஆம் இல. பொது நிருவாக சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு மற்றும் தாபன விதிக் கோவையின் vii ஆம் பந்தி

| | | |
|---|---|---|
| | நிறைவேற்றுஉத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மீள் பதில் கொடுப்பனவுகள் . (Rs.213,832/-) | தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டதும் தாபனவிதிக் கோவையின்படியானதுமான பதில் கொடுப்பனவு வழங்கப்பட்டது. |
| (ஊ) | பெறுகைகள் கையேட்டின் 3.5 ஆம் பந்தி 2.14 வழிகாட்டல் கோவை | 2011.11.08 ஆம் திகதிய CWE/GA/2011-R-10 ஆம் இல. கடித்த்தினைப் பார்க்கவும் |
| | குளிரூட்டி இயந்திரங்களுக்கான மீள் மின்சார வழங்கல் | |
| (எ) | 2007 ஆம் ஆண்டின் நவம்பர் 01 ஆம் திகதிய அமைச்சு சுற்றறிக்கை இல. No.8-1/1/73 | |
| | 268 ஆம் இல. (பொது) படிவமானது வாகன பதிவேடாக பயன்படுத்தப்பவில்லை | CWE கடந்த காலங்களில் வாகன பயன்பாட்டுக்காக விசேட நடைமுறையினை தயாரித்து அந்த நடைமுறைகளைப் பின்பற்றியுள்ளது |
| (ஏ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | (i) நி.பி. 103 | 2011, மார்ச் 25 ஆம் திகதிய CWE/GA/2011/R-AR-2 ஆம் இல. கடிதத்தினைப் பார்க்கவும்) |
| | (ii) நி.பி. 103 (I) | காணாமல் போன உபகரணங்களுக்கான விசாரணை நடாத்தப்பட்ட போதிலும் அதற்குப் பொறுப்பானவர்களை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. |
| | (iii) நி.பி. 133 | உள்ளக கணக்காய்வினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது கணக்காய்வுதொழிற்பாடுகளை கவனிப்பதற்கென உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். |
| | (iv) நி.பி.137, 138, 228,245(1) | (i) 2011, ஜீலை 04 ஆம் திகதிய CWE/GA/2011/R-16 ஆம் இல. கடிதத்தினைப் பார்க்கவும் |

| | |
|---|---|
| | (ii) இணங்குவதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது. |
| (v) நி.பி.225 (4) | உறுதிச் சீட்டுக்களைத் தயாரித்தல் மற்றும் செவ்வை பார்த்தலுக்கான சான்றாக உறுதிச் சீட்டுக்களில் கையெழுத்திடுவதற்கு பதவியினருக்கு ஏற்கவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (vi) நி.பி.245 (I) மற்றும் 257 | இணங்குவதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது. |
| (vii) நி.பி. 261 (3) | முன்னதாக காசோலைகள் வங்கி கூற்றுக்கு வழங்கப்படுவதற்கு முன்னதாக செலவினங்களை ஈடு செய்வதற்குப் போதுமான மீதியுள்ளதா என செவ்வை பார்க்கப்படுகின்றன. உரிய பதிவேடுகள் 2012 ஜனவரி 01 இலிருந்து பேணப்படும். |
| (viii) நி.பி. 264 (I) | (i) பற்றுச்சீட்டினைப் பெறுவதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது<br>(ii) 2011.11.08 ஆம் திகதிய CWE/GA/2011-R-10 ஆம் இல. கடிதத்தினைப் பார்க்கவும் |
| (ix) நி.பி. 272 (I) | அனைத்து உறுதிச்சீட்டுக்களும் தொடரிலக்கம் இடப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| (x) நி.பி.272 (3) | இணங்குவதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது. |
| (xi) நி.பி. 454 | நிதிப் பிரிவில் நிலையான சொத்து பதிவேடுகள் உள்ளன. அவற்றினைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் |
| (xii) நி.பி.754 மற்றும் நி.பி. 757 (I) (அ) | பண்ணேகமுவ ஆலையின் இருப்பேடுகளை இணக்கம் செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். |
| (xiii) நி.பி. 756 | இணங்குவதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது. |
| (xiv) நி.பி. 757 (2) (அ) | இணங்குவதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது. |
| (xv) நி.பி. 785 (4) | இணங்குவதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது. |

2.2.9 <u>கணக்காய்வுக்கான போதிய ஆதாரமின்மை</u>

(அ) மற்றும் (ஆ) 2011, ஒக்டோபர் 31 ஆம் திகதிய கடிதத்தினைப் பார்க்கவும்

3.2 தொழிற்பாடுகளின் மீளாய்வு

3.2.1 <u>ஒருங்கிணைந்த திட்டமும் செயல் திட்டமும்</u>

(அ) உரிய PED 12 சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு குறிப்பீடுசெய்யப்பட்டது.

(ஆ) பண்ணேகமுவ களஞ்சியமானது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமானது என்பது முகாமைத்துவத்தின் தீர்மானமாகும்.

(இ) நிதி நெருக்கடி காரணமாக ஆலைக்குத் தேவையான கொள்வனவினை மேற்கொள்ள முடியாத நிலையில் இருதோம். ஆலைத் தொழிற்பாட்டினை செயற்பாடற்ற நிலையில் வைத்திருக்க முடியாமையினால் அரிசியாக்குவதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபையிடமிருந்து நெல் பெறப்படுவதுடன் அரிசியாக்குவதற்கு கிலோவொன்றிற்கு ரூபா 3/50 அறவிடப்பட்டதுடன் அரிசி உற்பத்தியானது லங்கா சதொசவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

(ஈ) - அவ்வாறே -

(உ) நிதி நெருக்கடியின் காரணமாக பெறுகைகளுக்கான விசேட திட்டமெதனையும் தயாரிக்க முடியவில்லை என்பதுடன் அதே காரணத்தினால் ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் திட்டமிட முடியவில்லை.

(ஊ) மற்றும் (எ) இத்தகைய நிதி நெருக்கடியின் காரணமாக வங்கி வசதிகளைப் பெற முடியவில்லை.

(ஏ) தட்டுப்பாடு மற்றும் சந்தை விலைகளில் காணப்பட்ட அதிகரித்த போக்கு என்பவற்றின் காணமாக அமைச்சானது குறித்துரைக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை உள்ளூர் சந்தைகள் மற்றும் அரச வர்த்தக (கூட்டுறவு மொத்தவிற்பனை) கம்பனி ஆகியவற்றிடமிருந்து கொள்வனவு செய்வதற்குப் பணிப்புரை வழங்கியுள்ளது.

### 3.2.2 மக்கள் வங்கிக்கு செலுத்தத்தக்க பிணை

முறிக் கடன் – Rs.207, 050,943/-

திறைசேரியானது உத்தரவாத காலத்தினை 2012 ஜீன் வரையில் நீடித்துள்ளது

### 3.2.3 தொழிற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

(அ) நாம் ஏற்கனவே இருப்புக்களை இனங்கண்டுள்ளதுடன் வாடகை வருமதிகளுக்காக வரவுத் தாள்களைக் கோரியுள்ளோம்.

(ஆ) கேள்வி நடைமுறைகளுக்கமைவாக நாம் மீதி பொருட்கள் அனைத்தையும் ஏற்கனவே விற்பனை செய்து விட்டோம்.

(இ) இது முகாமைத்துவ தீர்மானமாகும்.

(ஈ) உரிய அனைத்து சிரேஸ்ட உத்தியோகத்தர்களும் 2004 இல் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ளமையால் இது தொடர்பில் முகாமையினால் கருத்துரை வழங்க முடியவில்லை. எவ்வாறாயினும், கிடைக்கக்கூடிய பதிவேடுகளின்படி, துயர்துடைப்பு கடன்கள், கடன் கொள்வனவுகள் மற்றும் மிகை கட்டணங்கள் தொடர்பில் கூமொதா இற்கு வருமதியாகவுள்ளதொகைகள் இறுதி வருமதிகள் மற்றும் நட்டஈடு என்பவற்றிற்கெதிராக முறையாக அறவீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(உ) 2011.12.08 ஆம் திகதிய CWE/GA/ (F.A.10)/2011 ஆம் இல. கடிதத்தினைப் பார்க்கவும்.

கணக்கில் எதிர்பாராத பொறுப்புக்களாக காட்டப்பட்ட கணக்குகளின் 18 ஆம் பக்கத்திலுள்ளஇல.18 தொடர்பானரூபா 3.8 மில்லியன் தொடர்பான வழக்குகள் நிலுவையிலுள்ளன

(ஊ) உரிய தகவல்கள் 2011.12.08 ஆம் திகதிய கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(எ) நீதிமன்றம் ரூபா 15 மில்லியனுக்கான தீர்ப்பினை வழங்கியுள்ளது.

ஆனால் நாங்கள் ரூபா 9 மில்லியனை செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளோம்

(ஏ) அமைச்சினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கமைய கூமொதா கட்டிடங்கள் பட்ஜட் சொப்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவை உடனடியாக வழங்கப்பட வேண்டியிருந்தமையால் அது தொடர்பில் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய கால அவகாசம் கிடைக்கவில்லை.

இதனால் நாம் சாதாரண நடைமுறைகளுக்கப்பால் அமைச்சின் பணிப்புரைக்கு இணங்க வேண்டியிருந்தது.

வாடகையானது சந்தைப் பெறுமதிகளில் அறவிடப்பட்டது.

(ஐ) கடந்த காலங்களில் இத்தகைய இயந்திரங்களை விற்பனை செய்வதற்குப் பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்ட போதிலும் அவற்றில் வெற்றி பெறவில்லை. எவ்வாறாயினும், இத்தகைய இயந்திரங்களை விற்பனை செய்வது தொடர்பில் நாம் வெளியக நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி வருகின்றோம்.

## 3.2.4 தொழிற்பாட்டு வினைத்திறமையின்மைகள்:

அவதானங்கள்:

(அ) இணங்குவதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது.

(ஆ) கூமொதா கட்டிடங்களையும் வளவுகளையும் லங்கா சதொசவிற்கு வாடகைக்கு வழங்குவதென்பது முகாமைத்துவ தீர்மானம் என்பதனால் லக் சதொசவிற்கு உள்ளக கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு கூமொதா தேவைப்படுத்தப்படுகின்றது. 2011, ஏப்பிரல் மாதத்திலிருந்து மாதமொன்றிற்கு ரூபா 1.7 மில்லியன் பெறுமதியில் வாடகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

(இ) மீதியாயுள்ள தளப்பரப்புக்கும் வாடகையினைக் கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(2011.12.08 ஆம் திகதிய CWE/GA/(F.A.10) ஆம் இல. கடிதத்தினைப் பார்க்கவும்).

## 3.2.5 பயன்பாடற்ற சொத்துக்கள்:

(அ) இத்தொழிற்பாட்டுக்குத் தேவையான நிதியின் கிடைப்பனவில் தங்கியுள்ளது. எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நாம் பயன்பாடற்ற சொத்துக்களை ஏற்கனவே லக் சதொசவிற்கு வாடகைக்கு வழங்கியுள்ளதுடன் சில பழைய லொறிகள், வான்கள் மற்றும் கார்களையும் விற்றுள்ளோம்.

(இ) 2003, டிசம்பர் 01 ஆம் திகதிய கொள்வனவு உடன்படிகயின் பந்தி 6.2((ஈ) நியதிகளின்படி,சதொச சில்லறை லிமிட்டடின் நடைமுறைக் கணக்கிலிருந்து நாம் ரூபா 381,412,591/- இனை பதிவளிப்பு செய்துள்ளோம்.
இப்பதிவானது 2004.03-31 இலுள்ளவாறான சதொச சில்லறை லிமிட்டடில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

2011, செப்ரெம்பர் 12 ஆம் திகதிய SC/E/CWE/FA/AQ/10/D/08 ஆம் இல. கணக்காய்வு வினாவுக்கு பதிலளிப்பதில் கணக்காய்வுக்குரிய விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன

(ஈ) 58 வாகனங்களில், 35 வாகனங்கள் நீதிமன்ற கட்டளைக்கிணங்க பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 2011, டிசம்பரில் மேற்கொள்ளப்பட்ட வாகனங்களின் பௌதீக உறுதிப்படுத்தலின் பின்னர் காணாமல் போன வாகனங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது.

(உ) இவ்விடயமானது லங்கா சதொசவுடன்கலந்துரையாடப்பட்டு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். லங்கா சதொசவிற்கு மாற்றப்பட்ட சொத்துக்களின் விரிவான அட்டவணை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

(ஊ) நிதி நெருக்கடியின் காரணமாக நெல்லானது கடன் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபையிடமிருந்து பெறப்படுகின்றது.ஆகையால், நெல் ஆலையின் தொழிற்பாடானது நெல் சந்தைப்படுத்தல் சபையிலிருந்தான வழங்கலிலேயே தங்கியுள்ளது.

## 3.2.6 <u>கொடுக்கல் வாங்கல்களை மறுசீரமைத்தல்</u>

எதிர்கால இணக்கப்பாடுகளுக்கான மதியுரைகளை பெறும் வகையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பான விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (2011, நவம்பர் 15 ஆம் திகதிய, .CWE/FM/Tre/2011 ஆம் இல. கடிதத்தின் பிரதியொன்று கணக்காய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 3.2.7 முதலீடுகள் :

2011.இல் பதிவளிப்புச் செய்வதற்கு குறிப்பீடு செய்யப்பட்டது.

## 3.2.8 <u>வாகனப் பயன்பாடு :</u>

(அ) நீதி மன்ற கட்டளையின் மூலமாக இது உள்ளடங்கலாக 35 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 2012 ஜனவரியில் வழக்குக்கு தீர்வு காணப்பட்டதன் பின்னர் அனைத்து வாகனங்களையும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) -அவ்வாறே-

(இ) போக்குவரத்துப் பிரிவின் தொழிற்பாடு மீளாய்வு செய்யப்படும்.அத்துடன் இது தொடர்பில், போக்குவரத்து முகாமையாளருக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

### 3.2.9 பணிக்கொடை நிதியத்திற்கான தேவைப்பாடு

இது தொடர்பில் உரிய நடவடிக்ககை 2012 இல் எடுக்கப்படும்..

### 3.2.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஆலையின் தொழிற்பாடானது நெல் சந்தைப்படுத்தல் சபையிலிருந்தான நெல் வழங்கலில் தங்கியுள்ளது.

### 3.2.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் :

காசுப்பற்றாக்குறை தொடர்பில்கணக்காய்வு வினா இலSC/E/CWE/10/C/05 இற்கு 2010.12.13 ஆம் திகதியன்று நாம், ஏற்கனவே பதலளித்துள்ளோம்.. ஆனால், பதிவேடுகளின்படி, பற்றாக்குறை ரூபா 496,708/= ஆகும்.

(பதில் இல...CWE/GA/10/R-17-2011.04.04)

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

### 3.2.12 கருத்திட்டமிடப்படாத 2010 இற்கான அரிசி விற்பனை இலக்குகள்

லக் சதொசவிற்கு விற்பனை செய்யப்பட்ட அரிசிக்கான கொடுப்பனவானது தவணை அடிப்படையில் அறவீடு செய்யப்படுகின்றது

### 3.2.13 இனங்காணப்பட்ட நட்டங்கள் :

(அ) மதிப்பீட்டு சபையின் அறிக்கையின்படி, விற்பனைச் சம்பாத்தியங்கள் லக்சதொசவிடமிருந்து பெறப்பட்டன.

(ஆ) பண்ணேகமுவவில் களஞ்சியப்படுத்தல் வசதியின்மையால் அத்தகைய இருப்புக்களை நாம் மீளவும் கொழும்புக்கு கொண்டு வந்து தனியாருக்கு விற்பனை செய்தோம்.

(இ) நாம் கோரப்பட்ட அதிகூடிய விலைகளில் இருப்புக்களை விற்பனை செய்தோம்

(ஈ) பேக்கரி உரிமையாளர்களின் கொடுக்குமதிகளிலிருந்து பிளாஸ்ரிக் கொள்கலன்களின் பெறுமதியினை நாம் கழித்துள்ளோம்

**3.2.14 <u>வழங்கல்களும் சேவைகளும்</u>**

2011.11.08 ஆம் திகதியன்று அனுப்பிய பதிலைப் பார்க்கவும்.

(உசாத்துணை இல.CWE/GA/2011-R-10)

**3.2.15 <u>ஒருங்கிணைந்த கொடுக்கல் வாங்கல்கள்</u>**

**அரசாங்க கம்பனிகள்**

அரச வர்த்தக (கூட்டுறவு மொத்த விற்பனை ) கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நாம் விற்பனை செய்துள்ளதுடன் எம்மால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அறவீடு செய்யப்பட்டன

**3.2.17 உரிய அதிகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

அரசாங்கத்திற்குச் சொந்தமானகட்டிடங்கள்

மற்றும் 1997/98 இல் நிருமாணிக்கப்பட்ட ஆலை

என்பன அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பணிப்புரையின் பேரில்

வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் வாடகை கொடுப்பனவு

தொடர்பில் எவ்வித உடன்படிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை

**3.2.18 <u>நியமனங்களும் பதவி உயர்வுகளும்</u>**

2011.11.03 ஆம் திகதியன்று அனுப்பிய பதிலைப் பார்க்கவும்

(கடித இல.CWE/GA/2011-R-4)

தங்கள் உண்மையுள்ள,

............................

**எராஜ் ரி.பெர்ணாண்டோ**

**தலைவர்**

**கூமொதா.**

இணைப்பு 01

2010.12.31 இலுள்ளவாறான விற்பனைச் செலவு

| | |
|---|---|
| 2010.01.01. இல் ஆரம்ப இருப்பு<br><br>கொள்வனவுகள் | 22,984,347<br><br>261,431,495 |
| கழி:-<br><br>2010.12.31 இல் இறுதி இருப்பு | 284,415,842<br><br>103,588,084 |
| | 180,827,758 |